# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM ජේසියම්



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 54 | 13.05.2023 (சனிக்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# எமது பிள்ளைகள் எங்கே

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே

# ஒன்றிணைந்து பேசுங்கள்!

பக்கம் 5

தமிழ் கட்சிகள் ஒன்றாக சிறிலங்கா அதிபரை சந்திக்கும் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காகவும் கதையுங்கள். எமது உறவுகள், பிள்ளைகள் இருக்கிறார்களா? இல்லையா? என்ன நடந்தது என்று கேளுங்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் அதிபருடன் கதைத்தால் மாத்திரமே தீர்வு ஒன்று கிடைக்கும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடம்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்துக்கு



# திருகோணமலையில் புதிதாக குடியேறும் தாய்லாந்து புத்தர் :

## தீவிர ஏற்பாடுகள் முன்னெடுப்பு

பக்கம் 5

திருகோணமலை நகரில் நெல்சன் திரையரங்குக்கு முன்னால் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள இடத்தில் 4 அடி உயரமான புத்தர் சிலையொன்று வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் பரவி வருகின்றன. இந்நிகழ்வில் நாளை (14.05.2023) தாய்லாந்தில் இருந்து புத்தர்சிலை கொண்டுவரப்படுவதோடு 50 பிக்குகளும்

# வடக்கில் எதற்கு புத்த விகாரை? நான் சிங்களவன் தான்!

## ஆனாலும் இடமளிக்கமாட்டேன் - யாழில் தேரர் விடாப்பிடி

வடக்கில் பௌத்தர்கள் குறைவாகவே உள்ள நிலையில் புதிதாக விகாரைகள் தேவையில்லை என யாழ். நயினாதீவு பௌத்த மதகுரு நவதகல பதும கீர்த்தி திசாநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார். வடக்கில் புதிதாக நிர்மாணிக்கப்படும் பௌத்த விகாரைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில், இராணுவம் இராணுவத்தின் வேலைகளை செய்ய வேண்டும்.

பக்கம் 5

# தமிழ் தரப்பு பாரிய அழிவுகளை

## எதிர்கொள்ள நேரிடும்..! சரத் விஜயசேகர எம்.பி.!

திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள சியாம் நிகாய பௌத்த வழிபாட்டுக்கு கூட்டமைப்பினர் தடையினை ஏற்படுத்தினால் பாரிய அழிவு ஏற்படும் என ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார். தொல்பொருள் திணைக்களத்தின் தூபி சின்னத்தை மாற்ற முடியாது. ஏனெனில், இலங்கை பௌத்த சிங்கள நாடு. பௌத்த சின்னங்களை

பக்கம் 5



# சிங்கள பேரினவாத அரசின் கைக்கூலியாக செயற்படும் தொல்லியல் திணைக்களம் - விஜயகுமார் காட்டம்!

யார் கூறினாலும் கூறாவிடிலும் வடக்கும் கிழக்கும் தமிழர்களுடைய தாயகம் எனவும் தமிழர்களின் பிரதேசங்களை தொடர்ந்தும் திட்டமிட்டு சிங்கள பேரினவாத அரசு அபகரிப்பதாகவும் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகுராசா விஜயகுமார் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் திருகோணமலையில் இடம்பெற்ற பௌத்த மயமாக்கலிற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், திருகோணமலையில் பௌத்த பேரின வாதத்திற்கு எதிராக போராட்டத்தினை முன்னெடுத்தோம். அதனை கூட செய்ய விடாது புலனாய்வாளர்கள் அச்சுறுத்தியும்

பக்கம் 5

# "என் சாவிற்கு காரணம் ஆசிரியரே"

## தவறான முடிவெடுத்து உயிரிழந்த மாணவன்



வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் ஆசிரியரின் பெயரை எழுதி விட்டு பாடசாலை மாணவன் நேற்று முன்தினம் (11.05.2023) தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். கோவிற்குளம் இந்து கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 10 இல் கல்வி பயிலும் 14வயதுடைய பாடசாலை மாணவன் தனது வீட்டில் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பக்கம் 5


**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**

**தொலைபேசி : +94 76 567 3339**


# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க : தமிழ் எம்.பிகளுக்கிடையேயான

## பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு



பக்கம் 5

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் வடக்கு- கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான இரண்டாம் நாள் பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதன்படி (15.05.2023) ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இந்தப் பேச்சு நடைபெறும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நல்லிணக்கம், அதிகாரப்

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# சந்திக்க அழைக்கின்றார்... சிந்தித்து செயற்படுங்கள்!

லண்டனில் இருந்து திரும்பியவுடன், நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளார் என செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த சந்திப்பில் இந்த 3 கட்சிகளையும் கூட்டாகவா அல்லது தனித்தனியாகவா ஜனாதிபதி சந்திக்கப் போகின்றார் என்பது தெளிவாக இல்லை.

இந்தக் கட்சிகளை அவர் கூட்டாக சந்திக்கப் போகின்றார் என்றால், எந்த அடிப்படையில் இந்த கூட்டான சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது என்பது, இயல்பா கவே எழுகின்ற கேள்வி!

இந்த 3 கட்சிகளும் கடந்த தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு, ஒரே பாராளுமன்றக் குழுவாக இயங்கி வந்திருக்கின்ற கட்சிகள்.

அந்த பாராளுமன்றக் குழுவின் தலைவராக சம்பந்தரே செயற்பட்டு வந்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தம்மை கூறி வந்திருந்தாலும், பாராளுமன்றத்தில் தேர்தல் சட்டத்தின் பிரகாரம், தமிழரசுக் கட்சி பாராளுமன்றக் குழுவாகவே, 10 எம்.பிக்களை கொண்ட அதன் குழு அங்கீகரிக்கப்பட்டு, அவ்வாறே கருதப்பட்டும் வந்திருக்கின்றது.

ஆனால், இந்த வருடம் தை மாதத்தில் உள்ளூராட்சி தேர்தலுக்காக வேட்பாளர் நியமனப் பத்திரம்கள் தாக்கல் செய்யப்பட இருந்த சந்தர்ப்பத்தில், இந்த மூன்று கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்தது.

அதற்குப் பதிலடியாக கூட்டமைப்பின் ஏனைய இரண்டு கட்சிகளும் ஓர் அதிரடி அறிவிப்பை கூட்டாக வெளியிட்டன.

தமிழரசுக் கட்சி தனிவழி சென்று விட்டதால், இப்பொழுது தாங்கள் தான் கூட்டமைப்பின் எஞ்சியுள்ள கட்சிகள் என்று அவை அறிவித்ததோடு, தமிழ்த் தேசியக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 3 கட்சிகளை கூட்டமைப்பில் இணைத்துக் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில், உள்ளூராட்சி தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதாக பிரகடனப்படுத்தின.

ஒரு சில ஆண்டுகளுக்குப் முன்னர், அதாவது, புளொட் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்ட 2011 க்கு முன்னர், வேறு இரண்டு கட்சிகளுடன் அது கூட்டாக இணைந்து, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் தேர்தல் திணைக்களத்தில் பதிவும் செய்யப்பட்டிருந்தது.

இப்பொழுது புது அவதாரம் எடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உள்ளூராட்சித் தேர்தலில் அந்தக் கட்டணியின் பெயரிலேயே நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தது.

ஆயினும், இப்பொழுது உள்ளூராட்சி தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஏற்படுத்திய சூடும் எங்கோ போய்த் தொலைந்து விட்டது!

ரெலோ எம்.பிகள் மூவரும், புளொட் எம் பி ஒருவரும் இந்தப் பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சியுனான கூட்டமைப்பு உறவை இன்னமும் துண்டிக்கவில்லை. ஆகவே, நடைமுறையில் தொடர்ந்து ஒரே அணியாகவே தமிழரசு,ரெலோ,புளொட் ஆகிய மூன்று கட்சிகளும் அங்கு இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் தான், இந்த மூன்று கட்சிகளையும் ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்திருக்கின்றார்.

சந்திப்பு கூட்டாகவா அல்லது தனித்தனியாகவா என்பது இனிமேல் தான் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அதை செய்ய வேண்டியது ஜனாதிபதி செயலகம்.

தமிழரசுக் கட்சி எம்.பி ஆகிய சுமந்திரன் இந்த சந்திப்பை கூட்டமைப்புடனான சந்திப்பு என்று ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

அதுதான் உண்மை நிலமை என்றால், என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், இந்த பேச்சுவார்த்தையை ஒரு பொது நிலைப்பாட்டோடு அணுகுவது இந்தத் தமிழ்க் கட்சிகளின் கடமை.

தினமும் ஒரு புதிய பிரச்சனை என, சிங்கள பௌத்த ஆதிக்கம் தமிழ் மாநிலத்தில், அதிகார வெறியுடன், நிர்வாணத் தாண்டவம் ஆடும் இன்றைய காலக்கட்டத்தில், ஜனாதிபதி உடனான இந்தச் சந்திப்பை, பொறுப்போடு இந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் அணுக வேண்டும்.

ஒரே குரலில், கூட்டாக இந்த சந்திப்பில் அவை பேச வேண்டும்.

இப்படி பேசுவதற்கு ஏதுவாக, இப்பொழுது இருக்கும் மிக குறுகிய கால இடைவெளியில், இந்தக் கட்சிகள் உடனடியாக சந்தித்து ஆலோசனை நடாத்த வேண்டும்.

சந்திப்பு தனித்தனியாக என்றால் தமிழரசுக் கட்சிக்கு பிரச்சனை இல்லை. அது தனிவழி கண்ட கட்சி!

ஆனால், ஓரணியில் நிற்கும் ரெலோ வும் புளொட்டும் இந்த சந்திப்பில் கூட்டாகவே கலந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணில் எந்தவொரு ராஜபக்சவையும் போன்றவர் அல்ல. உலகறிந்த இந்த உண்மை, தமிழ் மக்களுக்கும் தெரிந்தது தான்.

அவருடன் ஒன்றாக உட்காந்து இந்த மூன்று கட்சிகளும் பேசும் போது, எச்சரிக்கை உணர்வோடு அவை நடந்து கொள்ள வேண்டும். அது சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருக்கு, மடடும் அல்ல, மற்றவர்களுக்கும் சேர்த்துத் தான்.

ஜனாதிபதி தெரிவிற்கான பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு சில தினங்கள் கழித்து, தமிழ் எம் பிக்கள் தொடர்பில், அதுவும், கூட்டமைப்பு எம்பிக்கள் தொடர்பில், ஜனாதிபதி என்ன கூறியிருந்தார் என்பதை தமிழ் மக்கள் மறக்கவில்லை.

**எங்கள் தமிழ்த் தேசிய எம் பிக்களும் மறக்க கூடாது.**

ஆசிரியர்





















## காரைதீவு ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் பரிசளிப்பு விழா



காரைதீவு ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் பரிசளிப்பு விழா இ.கி.மி.பெண்கள் பாடசாலையில் நேற்று முன்தினம்(11) வியாழக்கிழமை நடைபெற்றது.

காரைதீவு ஆயுர்வேத மத்திய மருந்தக வைத்திய பொறுப்பு அதிகாரி டாக்டர் எம். சி எம். காலிட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்பி.அப்துல் வாஜித் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கோட்டக்கல்வி பணிப்பாளர் ஜே.டேவிட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

"இயற்கையோடு இணைந்து வாழ்வோம்" என்று விழிப்புணர்வு கருத்தரங்கும்," மருந்துவ தாவரங்கள்" வினா விடை போட்டியில் வெற்றி பெற்ற காரைதீவு கோட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றன.

## ஐந்து நாட்களாக காணாமல்போன யுவதி கொலை..? சந்தேகநபர் பரபரப்பு வாக்குமூலம்



கம்பளையில் காணாமல் போயிருந்த யுவதியை, தான் கொலை செய்ததாக சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

கம்பளை, எல்பிட்டிய வெலிகல்ல பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 22 வயதுடைய இளம் பெண் காணாமல் போயிருந்தார்.

சம்பவம் தொடர்பில் 24 வயதான சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

சடலத்தை புதைத்ததாக சந்தேக நபர் வாக்கு மூலம் அளித்த போதிலும், சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கெலிஓயா நகரில் அமைந்துள்ள தான் பணியாற்றும் மருந்தகம் இடத்துக்கு செல்வதற்கு வீட்டிலிருந்து சென்ற யுவதியொருவர் காணாமல் போயுள்ளார் என கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர் மேலும் வீட்டிலிருந்து சுமார் (100 மீற்றர்) தூர த்தில் அமைந்துள்ள பள்ளி வாசலில் பொருத் தப்பட்டிருந்த சிசிடிவி கெமராவில் குறித்த பெண் செல்வது பதிவாகியுள்ளது.

அத்துடன், கம்பளை, எல்பிட்டிய பிரதேசத்தில் 22 வயதுடைய இளம் பெண் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இடம் ஒன்றை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். மேலும் குறித்த இடத்தை அகழ்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# திருமலையில் பல்கலை மாணவர்கள் போராட்டத்தில் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல்!



திருகோணமலை மாவட்டத்தில் நேற்று காலை முதல் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட நிலையில் திருகோணமலை நெல்சன் திரையங்கிற்கு முன்பாக பௌத்தமயமாக்கல் தடுத்து நிறுத்தவேண்டும் என வும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட மோட்டார் வாகனங்களில் ஒவ்வொரு பகுதிக்கும் மாணவர்கள் பயணித்த வாகனத்தை பின்தொடர்ந்து வருகை தந்த புலனாய்வாளர்கள், மாணவர்களை ஒளிப்படம் எடுத்த நிலையில் ஊடகங்களை தவிர்த்து புகைப்படம் எடுக்கபடமுடியாது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நெல்சன் திரையரங்கிற்கு முன்பாக குழுமிய புலனாய்வாளர்கள் மாணவர்களை அத்துமீறி புகைப்படம் மற்றும் காணொளி எடுக்கும் நிலையில் போராட்ட களத்தில் இருந்து மாணவர்கள் எழுந்து, அரசின் கைக்கூலியே வெளியேறு என கோசமிட்டு முறுகல் நிலை தோன்றிய நிலையில் அவ்விடத்தை விட்டு விலகி சென்றிருந்தனர்.

தொடர்ச்சியாக பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் ஜனநாயகரதீயான நினைவேந்தல்கள் மற்றும் போராட்டங்கள் அச்சுறுத்தலுக்குட்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்த அனைவரும் தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் - கேதீஸ்வரன் ஆலோசனை!



யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்தவும் இறப்புக்களைத் தவிர்ப்பதற்கும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அனைவரும் தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் என தெரிவித்த யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ. கேதீஸ்வரன், விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்கள் தொடர்பாகவும் அறிவித்தார்.

டெங்கு நிலை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,யாழ் மாவட்டத்தில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 1160 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் ஒரு இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் பருவ மழைக்குப் பின்னர் யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டிய ஒரு அவசர தேவை உணரப்படுகின்றது. எனவே யாழ் மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் ஒருங்கிணைப்பதற்கும் மே மாதம் 16 மற்றும் 17 ஆகிய இரண்டு தினங்கள் விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விசேட தினங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளைத் திட்டமிடவும் ஒருங்கிணைப்பதற்கும் பிரதேசமட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டம் பிரதேச செயலாளர்கள் தலைமையிலும் கிராமியமட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்கள் கிராம சேவையாளர்கள் தலைமையிலும் இவ்வாரம் இடம் பெறும்.



இக்காலப்பகுதியில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிப்பதன் மூலம் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைவரும் பங்களிப்பு செய்ய வேண்டும். பொது மக்கள் தமது வீடுகளையும் வீட்டுச் சுற்றாடலையும் பார்வையிட்டு டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அழிக்க வேண்டும்.

வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் நீரேந்தும் கொள்கலன்களான சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், ஐஸ்கிறீம் கப், பொலித்தீன் பைகள், பழைய ரயர்கள், தண்ணீர்ப் போத்தல்கள் போன்றவற்றை அகற்ற வேண்டும்.

பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும். தண்ணீர்ப் பீலிகளில் நீர் தேங்காதவாறு துப்பரவு செய்தல் வேண்டும். மீன்தொட்டிகளில் தண்ணீரை அடிக்கடி மாற்றுதல் வேண்டும். தண்ணீர் சேகரித்து வைக்கும் பிளாஸ்ரிக் வாளிகளையும் தொட்டிகளையும் நன்றாகத் தேய்த்துக் கழுவ வேண்டும்.

பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவர்கள் சிரமதான அடிப்படையில் பாடசாலை வளாகத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்க வேண்டும். அரச தனியார் அலுவலகங்கள் வர்த்தக நிலையங்கள் வணக்கஸ்தலங்கள் பொதுச் சந்தைகள் போன்ற இடங்களைச் சிரமதான அடிப்படையில் சுத்திகரிக்க வேண்டும். பராமரிப்பின்றி காணப்படும் காணிகள் மற்றும் வீடுகளை உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் உடனடியாக துப்பரவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

இக்காலப்பகுதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணிக்க வீடுகளுக்கும் பொது நிறுவனங்களுக்கும் டெங்குக் கண்காணிப்புக் குழுவினர் வருகை தரவுள்ளனர். இக்களத் தரிசிப் பின்போது டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு முன்னெச்சரிக்கை வழங்கப்படும்.

அதன்பின்னரும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதுவிடின் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய காலப்பகுதியில் காய்ச்சல் கடுமையான தலைவலி மூட்டுவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். குறிப்பாக கர்ப்பவதிகள் முதியோர்கள் இவ்விடயத்தில் மிக அவதானமாகவும் துரிதமாகவும் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

டெங்கு நோயுடன் ஒருவர் உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குச் சமூகந்தந்தால் அவரை முற்றாகக் குணப்படுத்த முடியும். அதே வேளை மிக தாமதமாக வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டால் இறப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதனை கடந்த காலங்களில் எமது மாவட்டத்தில் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

எனவே யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்தவும் இறப்புக்களைத் தவிர்ப்பதற்கும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அனைவரும் தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் - என்றார்.

தேசியம் THESIYAM

# பாடசாலைகளில் இருந்து இடை விலகிய

## மாணவர்களின் விவரங்களை சமர்ப்பிக்கவும் - ஆளுநர் பணிப்புரை!



வட மாகாண பாடசாலைகளில் இருந்து இடை விலகிய மாணவர்களின் விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த, யாழ். மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

வட மாகாண பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகல்கள் இடம் பெறுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்கள் இடைவிலகுவது அல்லது கட்டாய விடுகைப் பத்திரம் வழங்குவது தொடர்பில் உரிய அதிகாரிகளின் தலையீடு பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

பாடசாலையிலிருந்து இடை விலகிய மாணவர்கள் சமூகத்தில் என்ன செய்கிறார்கள் என்பது தொடர்பில் பின் தொடர் அவதானிப்புகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஆகவே கடந்த மூன்று வருடங்களில் பாடசாலைகளில் இருந்து இடை விலகிய மாணவர்களின் பெயர் பட்டியலை தமக்கு அனுப்பி வைக்குமாறு ஆளுநர் சகல வலையக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

# யாழ். வேம்படி பாடசாலை மாணவிகளின்

## தேவைகள் நிறைவேற்றப்படும் : அமைச்சர் டக்ளஸ் உறுதி..!



யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாடசாலை தேவைப்பாடு தொடர்பில் அமைச்சரிடம் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் அவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுகிறது என அவரிடம் வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். வேம்படி பெண்கள் பாடசாலை மாணவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் எனக்கு தெரியப்படுத்தப்பட்டது.

பாடசாலையில் இயங்கிவந்த சிற்றுண்டிசாலையை மீள செயற்படுத்துவது தொடர்பில் மாணவர்களுக்கான வடிகட்டிய நீரை வழங்குவது தொடர்பிலும் என்னிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சிற்றுண்டிச் சாலையை ஏற்படுத்துவது தொடர்பில் பாடசாலை அதிபருடன் கலந்துரையாடியுள்ளேன். அவரும் அதனை செயற்படுத்துவற்கு ஆவலாக உள்ளார்.

சிற்றுண்டிச்சாலை அனுமதி தொடர்பில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததாக பாடசாலை அதிபர் தெரிவித்த நிலையில் அதனை விரைவுபடுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தகவல் வழங்கியுள்ளேன்.

மேலும், பாடசாலை மாணவர்களுக்காக ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த வடிகட்டிய குடிநீர் தொகுதி பழுதடைந்து விட்டதாக பாடசாலை அதிபர் தெரிவித்த நிலையில் புதிய தொகுதி ஒன்றை யாராவது முன்வந்து அன்பளிப்பு செய்தால் அதனை பொருத்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 16 மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம்

## கணித ஆசிரியர் தொடர்பில் வெளிவரும் திடுக்கிடும் தகவல்கள்!



களுத்துறையில் 16 பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, பிரதேசத்தை விட்டு ஓடி ஒளிந்திருந்த மேலதிக வகுப்பு ஆசிரியர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களுத்துறை வடக்கு பகுதியை சேர்ந்த 30 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை வடக்கு காலி வீதியிலுள்ள இடமொன்றில் கணித ஆசிரியராக வகுப்புகளை நடாத்திய இவர், சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தும் போது அனைத்தையும் கைத்தொலைபேசியில் பதிவு செய்து மடிக்கணினியில் சேமித்து வைத்துள்ளார்.

இதனிடையே, ஆசிரியருக்கு தகாத தொடர்பு இருப்பதாக சந்தேகித்த அவரது சட்டத்தரணி மனைவி, களுத்துறை வடக்குப் பொலிஸில் முறைப்பாடு செய்ததுடன், சந்தேகநபரின் மடிக்கணினியை இரகசியமாகப் பரிசோதித்துள்ளார்.

இதன் போது சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்யும் காட்சிகளைக் கண்டு, சிறுமிகளின் பெற்றோருக்குத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த சம்பவம் முதன்முறையாக தெரியவந்துள்ளதுடன், சந்தேகநபரின் பதிவான காட்சிகளுக்குகமைய, 16 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியிருப்பது தெளிவாகத் தெரியவருவதாகவும், பாதிக்கப்பட்ட சிறுமிகளைக் கண்டுபிடித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் களுத்துறை பிரிவு சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

சந்தேகத்திற்குரிய ஆசிரியர் குழுக்களாக வகுப்புகளை நடத்தியுள்ளார், மேலும் சம்பந்தப்பட்ட சிறுமிகள் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டார்கள் என்பதைக் கண்டறிய பொலிஸார் விரிவான விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

மேலதிக விசாரணையில், சந்தேகநபர் வகுப்புகளுக்குப் பிறகு மாணவிகளை வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி, தனது காரில் ஏற்றிச் சென்று, காட்டுப் பகுதியில் உள்ள வெறிச்சோடிய பகுதிகளில் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சில சிறுமிகளின் பெற்றோர் வீட்டில் இல்லாத போது, ஆசிரியர், ணழழஅ தொழில்நுட்பம் மூலம் சிறுமிகளை தொடர்பு கொண்டு, சிறுமிகளை ஆடைகளை கழற்றச் சொல்லி, காட்சிகளை கூட பதிவு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுமிகளில் களுத்துறை பிரதேச பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரின் மகளும் அடங்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

களுத்துறை பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

களுத்துறையில் சுமார் 16 பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் எனக் கூறப்படும் தனியார் வகுப்பு ஆசிரியரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபரை நேற்று (12.05.2023) களுத்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை அனுஸ்டிக்கும் முகமாக யாழ் மாநகரம் எங்கும் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.**



# யாழ். செம்மணி 30 ஏக்கர் அரச காணி விவகாரம்:

## ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானம்



யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலாக உள்ள செம்மணியில் 30 ஏக்கர் அரச காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிமம் மாற்றம் செய்வதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு சாதகமான பதிலை வழங்கவில்லை எனவும் உரிமம் மாற்றம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தே முடிவெடுப்பதாக ஒருங்கிணைப்புக் குழு தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

செம்மணியில் 290 ஏக்கர் நிலம் உப்பளத்துக்குச் சொந்தமானது. அந்தப் பகுதியில் யாழ்ப்பாணம் நகரத்தின் நெரிசலைக் குறைக்கும் வகையில் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்க நல்லாட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டது.

பேருந்து நிலையம், அரச திணைக்களங்கள், பொழுதுபோக்கு இடங்கள், விளையாட்டுத் திடல் என்பன அமைக்க முன்மொழியப்பட்டிருந்தாலும், அந்த நிலம் தொடர்பான சாத்தியக் கூற்று ஆய்வு மேற்கொள்வதற்கு பெருந்தொகைப் பணம் தேவையென்பதால் அது கிடப்பில்போடப்பட்டது.

தனியார் முதலீட்டாளர் ஒருவர் செம்மணியில் 30 ஏக்கரில் விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான யோசனையை முன்வைத்துள்ளார்.

அந்தக் காணி தொடர்பான சாத்தியக் கூற்று ஆய்வு மேற்கொள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை இணங்கியுள்ளது. அதனைத் தாம் முன்னெடுப்பதனால் அரச காணியான அதனை தமது திணைக்களத்துக்கு உரிமம் மாற்றம் செய்து தரவேண்டும் என்று கோரியுள்ளது.

இதற்கு அமைவாகமே மேற்படி கோரிக்கைக்கான அனுமதி கோரி யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இருப்பினும் அதற்கான அனுமதி கடந்த வாரம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எமது பிள்ளைகள் எங்கே...

முன்பாக இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்தில் யுத்த காலத்தில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் உறவினர்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்து மக்களுக்கு வழங்கினர்.

பள்ளிமுனை பங்கு தந்தை, உதவி பங்குத் தந்தை பொதுமக்கள், இளைஞர்கள் யுவதிகள் உட்பட அதிகளவான மக்கள் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டு, கஞ்சியை அருந்தினர். இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

“முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவு கூரும் வகையில், நாங்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வருகின்றோம். வருடா வருடம் இதனை செய்து வருகின்றோம். இதனை உப்பு இல்லா வெறும் கஞ்சி என்று ஒருவரும் நினைக்க வேண்டாம். எமது மக்கள் பட்ட துன்பம் துயரம் கலந்த உணவாக காணப்படுகின்றது.

இந்த கஞ்சியை பெற்றுக்கொள்ள மக்கள் எவ்வளவு தூரத்தில் நின்றதை நினைவு கூர வேண்டி உள்ளது. அதன் வலி எமது மக்களுக்கு இன்னும் தெரியவில்லை. வலி நிறைந்த கஞ்சி இது. மேலும் அதிபரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று சந்தித்து உள்ளனர்.

அவர்களிடம் நாங்கள் பல தடவை கோரியிருந்தோம் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் குறித்து கதைக்குமாறு. சுமார் 12 வருடங்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக வீதியில் இறங்கி போராடி வருகின்றோம்.

நாங்கள் வீதியில் நிற்கின்ற அம்மாக்கள் இல்லை. காணமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்காகவும், உறவுகளுக்காகவுமே போராடி வருகின்றோம். இதனை ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ள வேண்டும். அம்மாக்கள் இன்று 2 ஆயிரம் நாட்களுக்கு மேல் வீதியில் நிற்கின்றனர்.

அவர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்று அதிபருடன் கதையுங்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் அதிபருடன் கதைத்தால் மாத்திரமே தீர்வு ஒன்று கிடைக்கும். எத்தனையோ தேவைகளுக்கு எல்லாம் அதிபரை சந்தித்து கதைக்கின்றீர்கள்.

ஆனால் ஏன் வலிந்து காணாமல் போன எமது உறவுகளுக்காக கதைக்கின்றீர்கள் இல்லை? அதிபருடன் பேசுமாறு நாங்கள் எத்தனையோ தடவை உங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். தற்போதும் நாங்கள் உங்களிடம் கூட்டாக வேண்டிக்கொள்கின்றோம்.

தமிழ் கட்சிகள் ஒன்றாக அதிபரை சந்திக்கும் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காகவும் கதையுங்கள். எமது உறவுகள், பிள்ளைகள் இருக்கிறார்களா? இல்லையா? என்ன நடந்தது என்று கேளுங்கள்.

ஏற்கனவே எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அதற்கு தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. அதற்குள் மீண்டும் ஆரம்பித்து விட்டார்கள். இவை எதுவும் அரசாங்கத்திற்கு தெரியாமல் நடக்காது.

அரசுக்கு தெரிந்து கொண்டே கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது. இதனை எல்லாம் ஏன் அதிபருடன் பேச்சுவார்த்தைக்கு செல்லும் தமிழ் கட்சிகள் கேட்கக்கூடாது? இவ்வாறான பிரச்சினைகள் குறித்து கதைக்குமாறே தமிழ் மக்களாகிய நாங்கள் உங்களிடம் கேட்டுக்கொள்ளுகின்றோம்” என அவர் மேலும் தெரிவித்தார்.

## திருகோணமலையில் புதிதாக...

பங்கேற்கவுள்ளனர். 2,700 ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்திலிருந்து திருகோணமலைக்கு வந்து இறங்கியதாக கூறப்படும் பிக்குகளை நினைவுகூரும் முகமாகவும், அவர்களைக் கௌரவப்படுத்தும் முகமாகவும் அவர்கள் வந்து இறங்கியதாக மகாவம்சத்தில் கூறப்படும் திருகோணமலை நெல்சன் திரையரங்கிற்கு முன்னால் உள்ள தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் இடம்பெறவுள்ளது.

தாய்லாந்திலிருந்து நாளை சனிக்கிழமை திருகோணமலைக்கு வருகை தருகின்ற 50 பிக்குகளும் நிலாவெளியில் விடுதி ஒன்றில் தங்கவுள்ளனர்.

அவர்கள் நாளை (14.05.2023) காலை 7.30 மணிக்கு கடற்படைதளத்துக்குச் சென்று காந்தி சுற்றுவட்டப் பகுதியில் கடல் வழியாக வந்து இறங்கி பின்னர் பாத யாத்திரை மூலமாக நெல்சன் திரையரங்கு முன்னால் உள்ள 4 அரச மரங்கள் இருக்கின்ற இடத்துக்குச் செல்லவுள்ளனர்.

அங்கு தாய்லாந்திலிருந்து அவர்களால் கொண்டுவரப்படுகின்ற 4 அடி உயரமான புத்தர் சிலையை அவ்விடத்தில் வைத்து ஒரு மணித்தியால பிரித் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அது நிறைவு பெற்றதும் ஜெயசுமராம விகாரைக்குச் சென்று அங்கிருந்து முற்பகல் 11.30 மணியளவில் கண்டி நோக்கிய தாய்லாந்தை அவர்கள் தொடங்குவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த காலகட்டத்தில், 2005ஆம் ஆண்டு திருகோணமலை நகரில் புத்தர் சிலை வைக்கப்பட்டமையால் பெரும் கலவரம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் தரப்பு பாரிய அழிவுகளை...

அழித்து, அதன் மீது சிவலிங்கம், திரிசூலம் ஆகியவற்றை பிரதிஷ்டை செய்து, அதனை கோவிலாக திரிபுபடுத்துவோர் தண்டிக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. இன்றும் இதன் தாக்கம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கப்பலில் எசிட் இரசாயன பதார்த்தக் கசிவு ஏற்பட்டுள்ளதை மறைத்தே கொழும்பு துறைமுகத்தின் கடற்பரப்பில் இந்த கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இந்த கப்பல் 2021.05.20ஆம் திகதி முதல் தீ விபத்துக்குள்ளாகி, 2021.06.02ஆம் திகதி கடலில் முழுமையாக மூழ்கியது.

இந்த கப்பலில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த இரசாயன பதார்த்தங்களினால் கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந்தன.

ஆகவே, ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு கோரி சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும். அத்தோடு, தொல்பொருள் திணைக்களத்தின் சின்னத்தை மாற்ற வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினையாக தூபி காணப்படுகிறது. ஏனெனில், இலங்கை ஒரு பௌத்த நாடு. ஆகவே, எக்காரணிகளுக்காகவும் தொல்பொருள் சின்னத்தை மாற்றியமைக்கப் போவதில்லை.

புராதன தொல்பொருள்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சகல இனங்களுக்கும் உண்டு. இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு. ஆகவே, நாட்டு மக்கள் அனைவரும் புராதன தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க வேண்டும்.

பௌத்த சின்னங்களை அழித்து, அதன் மீது சிவலிங்கம், திரிசூலம் ஆகியவற்றை அமைத்து கோயிலை கட்டுவது முறையற்றது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு அப்பாவி தமிழ் மக்களை யுத்த பகடைக்காயாக கொண்டு செயற்பட்டபோது தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உட்பட தமிழ் பிரிவினை அரசியல்வாதிகள் கொழும்பில் பாதுகாப்பாக வாழ்ந்தார்கள்.

தமிழ் மக்கள் தொடர்பில் அப்போது கரிசனை கொள்ளவில்லை. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இவர்கள் தமிழர்களின் நலன் விரும்பிகள் போல் கருத்துரைக்கிறார்கள்.

சுமந்திரன் உட்பட பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகள் பௌத்த சின்னங்களை அழிக்க ஒத்துழைப்பு வழங்கிவிட்டு, வெறுப்பு பேச்சுக்களை வடக்கில் குறிப்பிட்டுவிட்டு கொழும்பில் பாதுகாப்பாக வாழ்கிறார்கள்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற காரணத்தினால் இவ்வாறானவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். பிற நாடுகள் இவ்வாறு செயற்பட்டால் உயிருக்கு உத்தரவாதம் கிடையாது.

பௌத்த மதத்தின் மேன்மை பொருந்திய சியாம் நிகாயவின் 270ஆவது வருட நிறைவு திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி சிறப்பான மத அனுஷ்டானமாக கொண்டாடப்படவுள்ளது.

இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழ் அரசியல்வாதிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். இது முறையற்றது. வரலாற்று சிறப்பு மிக்க இந்த மத அனுஷ்டானத்துக்கு கூட்டமைப்பினர் தடை ஏற்படுத்தினால் பாரிய அழிவுகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டும் என்பதை கூட்டமைப்பினர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

## வடக்கில் எதற்கு புத்த விகாரை?

மதகுருமார்கள் ஆலயம் தொடர்பான வேலைகளை செய்ய வேண்டும். எனினும் மாறி மாறி வேலைகளை செய்யக்கூடாது. பழமையான கோயில்கள் இருந்தால் பரவாயில்லை.

புதிது புதிதாக நிர்மாணிக்கப்படும் வழிபாட்டிடங்களேயே நான் கூறுகிறேன் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நெடுந்தீவு, மாதகலில் இவ்வாறு விகாரைகளை அமைக்க வந்த போதும் நான் அதற்கு இடமளிக்கவில்லை.

நான் எப்போதும் மக்கள் பக்கத்தையும் சரியான பக்கத்தையுமே எடுப்பேன். நான் சிங்களவன் தான். இருந்தாலும் நேர்மை இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## சிங்கள பேரினவாத அரசின்...

காணொளிகளையும் எடுத்தனர். அந்த வகையில், திருகோணமலை மண்ணிலே புத்த விகாரைகள் எதற்கு? தமிழர் பகுதிகளில் இராணுவ , CID மற்றும் ஆக்கிரமிப்புக்களும் இடம்பெறுகின்றது. பொதுவாக காணப்படும் மயானத்தை கூட பிச்சை எடுக்கும் வகையில் அபகரித்து வைத்துள்ளனர். அத்தோடு தமிழர்களின் நிலங்களையும் அபகரித்து வைத்துள்ளனர்.

திருமங்களாயில் காட்டு பகுதி என்றும், மலையடி பிள்ளையார் கோயிலில் புத்த விகாரை கட்டியும் வைத்துள்ளனர். ஆனால் எமக்கு ஆலயங்களை அமைப்பதற்கு எந்த உரிமைகளும் இல்லை. இவ்வளவும் போதாதென்று தாய்லாந்திலிருந்து புத்த சிலையை கொண்டு வந்து வைக்கவுள்ளனர்.

அத்தோடு இனவழிப்பு நாளான மே 18 கூட விட்டு வைக்காது தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்காக கிளிநொச்சியில் உருத்திரபுர சிவன் ஆலயத்தை ஆக்கிரமிப்பதற்காக தொல்லியல் திணைக்களம் அரசின் கைக்கூலியாக அதை அளவிடவுள்ளது. இவ்வாறு திட்டமிட்டு பறித்தால் வடகிழக்கு ரீதியாக பெரும்பான்மையான மாணவர்களையும், மக்களையும் இணைத்து போராட்டங்களை மேற்கொள்வோம். எமது பகுதியான வடகிழக்கில் எம்மால் சுதந்திரமாக திரிய முடியவில்லை. இந்த சிங்கள பேரினவாத அரசு எம்மை அடக்கி கொண்டுள்ளது. யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்பதுடன் சிங்கள பௌத்தர்களிற்கு எந்தவிதமான இடமும் இல்லை எனவும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்...

பகிர்வு தொடர்பாகத் தொடர்ந்து இரண்டு நாட்கள் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். அதன்படி முதலாம் நாள் பேச்சு ஜனாதிபதி செயலகத்தில் (11.05.2023) ஆம் திகதி மாலை 5 மணி முதல் 7 மணி வரை நடை பெற்றது.

இந்தப் பேச்சில் 5 முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு மற்றும் அத்துமீறல்கள் மற்றும் படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளின் விடுவிப்பு, பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகிய ஐந்து விடயங்கள் குறித்தே பேசப்பட்டன.

இந்நிலையில் இரண்டாம் நாள் பேச்சு நேற்று மாலை 5 மணிக்கு நடைபெறவிருந்தது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அதிகாரப் பகிர்வு குறித்து பேசப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது எனினும், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (12.05.2023) மாலை நடைபெற்ற நலன்புரி நன்மைகள் வழங்குவது தொடர்பான சட்டமூலம் மீதான வாக்கெடுப்பைக் கருத்தில்கொண்டு இரண்டாம் சுற்றுப் பேச்சு எதிர்வரும் திங்கட்கிழமை வரை பிற்போடப்பட்டுள்ளது.

## “என் சாவிற்கு காரணம் ஆசிரி...

என் சாவிற்கு காரணம் வவுனியா இந்து கல்லூரி ஆசிரியர் சுரேன் என எழுதி வைத்திருந்த கடிதமும் மாணவனின் வீட்டிலிருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக மாணவனின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மாணவனின் பெற்றோரிடம் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் மேலதிக விசாரணைக்காக குறித்த ஆசிரியரிடமும் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இளம் ஜோடிக்கு காத்திருந்த பெரும் அதிர்ச்சி : உயிரிழந்த யுவதி தொடர்பான தகவல்!



கொஸ்லாந்தை பகுதியில் யானை தாக்குதலுக்கு இலக்கான இளம் ஜோடி தொடர்பான தகவல்கள் வெளியாகி உள்ளது.

உடதியுலும பகுதியில் கூடாரம் அமைத்து இரவுப்பொழுதை கழித்த இளம் ஜோடியை காட்டு யானை தாக்கியதில், யுவதி உயிரிழந்துள்ளார். 23 வயதான கவிசா இயூஜின் என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். 23 வயதான தனுஷ்க மற்றும் இயூஜின் நாட்டின் பல இடங்களுக்கு சென்று அந்தக் காட்சிகளில் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருதால் பிரபலயம் அடைந்துள்ளனர்.

அவ்வாறு காணொளி ஒன்றை பதிவு செய்யும் நோக்கில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணி ளவில் உடதியலுமை பகுதிக்கு இந்த இளம் ஜோடி சென்றிருந்தது.

எனினும், இந்த பயணம் இயூஜினின் இறுதிப் பயணமாகவே அமைந்தது. காட்டு யானை தாக்கியதில் அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம மக்கள் நேற்று காலை சென்று பார்த்த போது தனுஷ்க மதுஷான் காயமடைந்த நிலையில் இருந்துள்ளார்.

மாத்தறை - கெக்கனதுர பகுதியை சேர்ந்த இவர் மாத்தறையில் உள்ள தனியார் மருத்துவமனையில் தாதியாக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பகுதியில் சோழர்காலத்தில் கட்டப்பட்ட சிவாலயத்தை குறிவைத்த தொல்பொருள் திணைக்களம்..! தொடரும் அடாவடி



கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம் அமைந்துள்ள காணியில் தொல்பொருட்கள் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளது.

இந்துக்களின் பொற்காலமாகக் கருதப்படும் சோழர்காலத்தில் முற்றுமுழுதாக திராவிடக் கட்டடக் கலைமரபை பின்பற்றி உருத்திர புரீஸ்வரர் சிவாலயம் கட்டப்பட்டது.

வரலாற்றுத் தொன்மையும், பழமையும் வாய்ந்த சிவாலயத்தை அபகரிப்பதற்கான முயற்சிகள் தொல்பொருளியல் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் உருத்திரபுரஸ்வரபுரம் ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்லியல் சின்னங்கள் அமைந்துள்ளதாக தொல்லியல் திணைக்களம் கூறியுள்ளது.

ஆகவே குறித்த நிலப்பரப்பினை எல்லைப் படுத்தும் நடவடிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானித்து கரைச்சி பிரதேச சபையினால் அறிக்கையொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

# யாழில் சர்வதேச தாதியர் தின நிகழ்வு!!




சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு தாதிய உத்தியோகத்தர்களுக்கென விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அட்டை வழங்கும் அங்குரார்ப்பன நிகழ்வு நேற்று யாழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலையும், தாதியர் பயிற்சி கல்லூரியும் இணைந்து நேற்று முன்னெடுத்த சர்வதேச தாதியர் தின நிகழ்வில்,யாழ் ஹற்டன் நேஷனல் வங்கியின் மெட்ரோ கிளையினரும் பங்காளர்களாக இணைந்து கொண்டு தாதியர்களுக்கென விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அட்டைகளை வழங்கி வைத்தனர். குறித்த நிகழ்வு யாழ் போதனா வைத்திய சாலை தாதியர் பயிற்சி கல்லூரியில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் ஹற்டன் நேஷனல் வங்கியின் மெட்ரோ கிளையின் செயற்பாடு முகாமையாளர் சி.மயூரன்,யாழ் ஹற்டன் நேஷனல் வங்கியின் உறவு நிலை முகாமையாளர் டசிகா ஜனகன்,பொது வைத்திய நிபுணர் பேரானந்தராஜா, தாதியர் பயிற்சி கல்லூரி அதிபர் ஜெயக்குமார், பிரதம தாதிய பரிபாலகர் சந்திர மவுலீசன், தாதிய பரிபாலகர் சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ். நகர் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்கு சீல் வைப்பு!



யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் மாதாந்தம் குழுவாக உணவகங்கள், பலசரக்கு கடைகள் என்பன கிரமமாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த புதன்கிழமை பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினால் யாழ். நகர் பகுதியில் உணவகங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உணவகங்கள் இரண்டு, பல்வேறு வகையான சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கியமை பொது சுகாதார பரிசோதகர்களினால் கண்டறியப்பட்டது. இதனையடுத்து நேற்றைய தினம் 12.05. 2023 யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் 02 உணவகங்களுக்கும் எதிராக "B" அறி க்கையில் வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டது.

வழக்குகளை விசாரணை செய்த நீதவான் உணவகங்களை மறு அறிவித்தல் வரை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகரிற்கு உத்தரவிட்டதுடன், உணவக உரிமையாளர்களை தலா ஒரு இலட்சம் சரீரப்பிணையில் விடுவித்தார். அத்துடன் வழக்கு விசாரணையினை எதிர்வரும் 28.06.2023 ற்கு ஒத்திவைத்தார்.

இதனை தொடர்ந்து யாழ்நகர் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் குறித்த இரண்டு உணவகங்களும் சீல் வைத்து மூடப்பட்டன.






# திருகோணமலை புத்தர் சிலைக்கு பின்னால் இப்படியொரு இரகசிய திட்டமா?

## ந.சிறீகாந்தா வெளியிட்டுள்ள தகவல்!



தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல்களை, ஏதாவது ஒரு இடத்தில் ஆரம்பித்து வைக்கவும், அதனை சாட்டாக வைத்து தமிழ்ப் பிரதேசமான வடகிழக்கு மாகாணங்களில் அரசாங்க அடக்கு முறையை மேலும் இறுக்கிக் கொள்ளும் நோக்கத்துடனேனே திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சி தலைவர் ந.சிறீகாந்தா சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எதிர்வரும் 14ம் திகதி ஞாயிற்றக்கிழமை திருகோணமலை நகரில், கடற்கரை வீதியில், விளையாட்டு அரங்கிற்கு முன்னால் காணப்படும், நான்கு அரச மரங்கள் அமைத்திருக்கும் இடத்தில், புத்த பெருமானின் சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்படும் நிகழ்வு இடம் பெற உள்ளது.

தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள, நான்கு அடி உயரமான புத்தர் சிலையுடன், இலங்கைக்கு வந்துள்ள 50 பௌத்த பிக்குகள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இலங்கையில் தமிழ் மக்களின் நீண்ட வரலாற்றில் முக்கிய இடம் வகித்து வந்திருக்கும் திருகோணமலை மண்ணில், இந்த புத்தர் சிலை நாட்டப்படுவதற்கு போலியான காரணங்கள் வரலாற்றை திரிபுபடுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக புத்தரின் சிலைகளை ஆயுதமாக பயன்படுத்தி, தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையோடு, தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வந்திருக்கும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் நீட்சியாகவே, இந்த புத்தர் சிலை பிரதிஷ்டம் நிகழ்த்தப்பட உள்ளது.

அரசாங்கத்தின் முழுமையான ஆதரவோடு தான் இது மேற்கொள்ளப்படுகின்றது என்பதில் எந்தவொரு சந்தேகமும் இருக்க முடியாது.

இந்த, இன – மத ரீதியிலான ஆக்கிரமிப்புக்கு எதிராக, தமிழர் தரப்பில் எழுப்பப்படும் குரல்களை மௌனிக்க வைக்கும் நோக்கத்தோடு, வடித்தெடுத்த இனவெறியரான அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மிரட்டல் தொனியில் பாராளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

நிகழ்வை தடுத்து நிறுத்த முயன்றால், பாரிய அழிவுகள் ஏற்படும் என்றும் அவர் கர்ச்சித்திருக்கின்றார்.

அவரைப் போன்ற சிங்கள இனவெறியர்களின் மிரட்டல்கள், நீண்ட பல வருடங்களாக தமிழ் மக்களுக்கு பழகிப்போன சங்கதிகளாக இருந்தாலும் கூட, இனக் குரோதத்தை தூண்டுகின்ற இத்தகைய பேச்சுக்களை, இவரும் இவரைப் போன்றவர்களும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் தொடர்ந்து நிகழ்த்தி வந்திருக்கின்றார்கள். ஒரு சில வாரங்களுக்கு முன்னர், 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு முன்வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கட்சிளின் கோரிக்கை பற்றி பேசிய எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச, 13வது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கடந்த காலங்களில் இலங்கை சந்தித்த கலவரங்களை விட, மிக மேசமான கலவரம் வெடிக்கும் என, தனக்கே உரிய பானியில் மிரட்டல் விடுத்திருந்தார்.

நாட்டின் அமைதியை குலைக்கக் கூடிய அபாயத்தைக் கொண்டிருக்கும் இத்தகைய இனவெறிப் பேச்சுக்கள் தொடர்பில், எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தமிழ் மக்களின் கோரிக்கைகளை சாத்தியமான அளவுக்கு மட்டுப்படுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், இவ்வித இனவெறி எச்சரிக்கைகள் உதவும் என்று ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் நம்புவதே இதற்கு காரணமாகும்.

இப்பொழுது திருகோணமலை நகரில் புத்தர் சிலையை முன்நிறுத்தி சிங்கள பௌத்த பேரினவாதம் தன் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முனைகின்றது. இந்தச் சூழ்நிலையில், திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் இந்தச் சவாலை நிதானத்தோடு எதிர்கொள்வதே உகந்தது ஆகும்.

தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல்களை, ஏதாவது ஒரு இடத்தில் ஆரம்பித்து வைக்கவும், அதனை சாட்டாக வைத்து தமிழ்ப் பிரதேசமான வடகிழக்கு மாகாணங்களில் அரசாங்க அடக்கு முறையை மேலும் இறுக்கிக் கொள்ளவும், நிகழ்ச்சிநிரல் தீட்டப்படுவதாகவே சந்தேகிக்க வேண்டி உள்ளது. நாட்டில் நிலவிக்கொண்டிருக்கும் நெருக்கடி மிக்க சில பிரச்சினைகளுக்கு உடனடிப் பரிகாரமாகவும் இதனை சில சக்திகள் கருதக் கூடும்.

ஏனெனில் வடகிழக்கு மாகாணங்களில் பரவலாக தீவிரப்படுத்தப்படும் புத்தர் சிலை விவகாரங்கள் ஒன்றும் தானாக முளைத்தவை அல்ல, இவற்றுக்கப் பின்னால், சில மறைகரங்கள் செயற்படுவதாகவே சந்தேகிக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில், திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை, அந்த மாவட்டத்தோடு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளாமல், வடகிழக்கு மாகாணங்களை தழுவிய நிலையில், ஒற்றுமையாக எதிர்கொள்வதே இப்போது தேவைப்படுகின்றது.

இத்தகைய பிரச்சினைகளுக்கெல்லாம் எதிர்ப்பு தெரிவித்தே சமீபத்தில் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், எதிர்ப்பு நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதே திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் உணர்த்தி நிற்கும் செய்தியாகும்.

கட்சி வேறுபாடின்றி தமிழ் மக்களை அணி திரட்டி, பாதிக்கப்பட்டிருக்கும் முஸ்லீம் மக்களின் ஆதரவையும் கோரி, பாரிய அரசியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்வது என்பதே இன்றைய உடனடித் தேவையாகும்.


## வெளிவரவிருக்கும்
### தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

NEWSPAPER SIZES, RATE PER EDITION & ORDER FORM

WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 94 76 567 3339

E-mail : thesiyamnews@gmail.com | Web : www.thesiyamnews.com